DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 05.03.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.29/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.3 |
| Name | : | விஜயகுமார் |
| Father Name | : | பொன்னுசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 05.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.24.P.M):-**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், செங்காட்டில் குடியிருந்து கறிக்கடை வைத்து நடத்தி வருகின்றேன். கடந்த 11.02.2025-ம் தேதி காலை 10.30 மணியளவில் ஏற்காடு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு கொண்டிருந்தபோது நானும் எனது மாமன் மகன் கண்ணன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது ஏற்காடு போலீசார் வரைபடம் வரைந்துகொண்டிருந்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 1-வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. எந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் கையெழுத்து பெற்றனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மகஜரில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் மகஜரில் கையெழுத்து பெற்ற போலீசாரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பற்றி தெரியாது என்றும், ஆவணங்கள் அனைத்து நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் வந்த வண்டியின் வாகன எண் தெரியுமா என்றால் தெரியாது.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.29.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.05 12:32:04 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.